1968, மார்ச் 5]

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : இந்தக் கடலையின் தேவையினால் அது பல வியாபாரிகளுக்கும் சரி, ஹோட்டல் முதலாளிகளுக்கும் சரி கஷ்டத்தைக் கொடுத்துக் கொண்டே இருக்கிறதே, கோயில்களிலே சுண்டல் அதிகமாகக் கொடுப்பார்கள். இப்பொழுது அது தேவைப்படுகிறதா, இல்லையா என்பதைக் கேட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : எனக்குக் கோயில்களிலே அதிகப் பரிச்சயம் இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : தலைவர் அவர்களே, மற்ற உணவுப் பண்டங்களின் விலை, மிளகாய், புளி இவற்றின் விலையெல்லாம் இறங்கியிருக்கிறது. அதில் சந்தேகம் இல்லை. ஆனால் கடலையின் விலை மாத்திரம் இறங்கவில்லை. வடக்கேயிருந்து அது வர வேண்டியிருக்கிறது. அதைக் கொண்டுவருவதற்குத் தாராளமாகப் பெர்மிட் சலுகைகளை வியாபாரிகளுக்குக் கொடுத்து சர்க்கார் இங்கு வரவழைக்குமா ? அரிசியைக் கொடுத்து விட்டு இங்கே கடலையை வாங்குவதற்கு வழியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : திருப்பித் திருப்பிச் சொன்னேன். இந்த அரசாங்கம் எல்லா முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த மன்றமும் ஆதரவு அளித்தால் இந்தக் காரியம் மிக சரளமான நிலைமைக்கு வரும் என்று எல்லோரும் எதிர்பார்க்கலாம்.

திரு ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : இந்தப் பயிர் வகைகள் விளைகின்ற வடக்கே உள்ள மாநிலங்களிலே 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்கின்ற காரணத்தினாலே அங்கேயுள்ளவர்கள் உற்பத்தியைக் குறைத்துக்கொண்டார்கள் என்றுகூட பேச்சு அடிபடுகிறதே, அது உண்மைதானா என்று சொல்லமுடியுமா ? அப்படி 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்கின்ற நிலைமையினால்தான் இப்படிப்பட்ட கஷ்டம் ஏற்படுகிறது. எனவே தனியார் வியாபாரிகளை அனுமதித்தால் இந்தக் கஷ்டம் இருக்காது என்பதால் அப்படிச் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : 75 ரூபாய்க்கு வாங்கி 150 ரூபாய்க்கு விற்பதாகச் சொல்லுகிறார்கள். அது தோராயமானது. பொதுப் படையாகச் சொல்வதற்கு நான் பதிலளிக்க முடியாது. அவர்கள் கூறுவது சரியான பொருள் நிறைந்த காரியம் அல்ல. இப்பொழுது இருக்கிற சர்க்காரினுடைய கொள்கை, அரசாங்கமே முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற கருத்து அல்ல.

(திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் எழுந்தார் . . . .)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களை அழைக்கவில்லையே, அழைத்தால்தான் பேசவேண்டும்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மாவட்டவாரியாக எவ்வளவு கடலை விநியோகிக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதற்கு ஏற்கனவே நான் பதில் அளித்துவிட்டேன்.

காட்டுவளத்துறையினர் பயிற்சிப் பள்ளிகள்.

*146 வினா.—திரு. பெ. மலைச்சாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :—

தமிழகத்தில் காட்டுவளத்துறைப் பணியாளர் பயிற்சி நிலையங்கள், காட்டுவள ஆராய்ச்சி நிலையங்கள் முறையே எங்கெங்கு உள்ளன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழ்நாட்டில் காடுகள் துறைப் பணியாளர் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு உள்ளன: (1) வைகை அணையில் உள்ள தமிழ்நாடு காடுகள் துறைப் பயிற்சிப் பள்ளி, (2) கோவையில்

உள்ள தென் பகுதி வனச் சரக அலுவலர்கள் கல்லூரிஆகிய இரண்டுமே அவை. கீழே விவரங் கண்டுள்ளவாறு 15 ஆராய்ச்சி நிறுவனங்களும், இரண்டு துணை நிறுவனங்களும் உள்ளன :—

உதகை ஆராய்ச்சி சரகம்—

1. உதகை நிலையம்.
2. டாப்ஸ்லிப் நிலையம்.
3. மசின்குடி துணை நிலையம்.
4. பன்னாரி (மெம்மலூர்) துணை நிலையம்.

கோடைக்கானல் ஆராய்ச்சி சரகம்—

1. கோடைக்கானல் நிலையம்.
2. நாகர்கோயில் நிலையம்.
3. வைகை அணை நிலையம்.
4. வேம்புருளி நிலையம்.

டெங்கனிக்கோட்டை ஆராய்ச்சி சரகம்—

1. ஆராய்ச்சி நிலையம், டெங்கனிக்கோட்டை.

இராமேஸ்வரம் ஆராய்ச்சி நிலையம்—

1. ஆராய்ச்சி நிலையம், இராமேஸ்வரம்.

சைதாப்பேட்டை ஆராய்ச்சி சரகம்—

1. ஆராய்ச்சி நிலையம், மரக்காணம்.
2. ஆராய்ச்சி நிலையம், உளுந்தூர்பேட்டை.
3. ஆராய்ச்சி நிலையம், கிண்டி.
4. ஆராய்ச்சி நிலையம், வண்டலூர்.
5. ஆராய்ச்சி நிலையம், சோழபுரம்.

மிலாறு (வாட்டில்) மும்முர ஆராய்ச்சிப் பிரிவு—

1. ஆராய்ச்சி நிலையம், மிலாறு மும்முர ஆராய்ச்சிப் பிரிவு, உதகை.
2. ஆராய்ச்சி நிலையம், மிலாறு மும்முர ஆராய்ச்சிப் பிரிவு, கோடைக்கானல்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, இப்போது இந்தப் பயிற்சிப் பள்ளியில் எத்தகைய பயிற்சி கற்பிக்கப்படுகிறது ? இதுவரை மொத்தம் எத்தனை பயிற்சியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : காட்டுப்பகுதியில் உள்ள மரங்களை எந்த அளவுக்குப் பாதுகாப்பது, அதன் மூலம் என்னென்ன தொழில்களைக் கொண்டு வரலாம் என்ற விவரங்கள் அடங்கிய பயிற்சி கொடுக்கப்படுகிறது. இதுவரை 330 ஃபாரஸ்டர்களும், 435 ஃபாரஸ்ட் கார்டுகளும் இதுவரை பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

திரு ஜே. ஜேம்ஸ் : கன்னியாகுமரி ஜில்லாவில் அரசாங்கத்தாரால் நடத்தப்பட்டு வருகிற ரப்பர் ப்ளான்டேஷன் ஃபாரஸ்ட் டிப்பார்ட்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகிறது. அங்கு செயல்பட்டுக் கொண்டிருக்கிற ஃபாரஸ்ட் ரேஞ்சு ஆபீசர்களுக்கும், ஃபீல்டு ஆபீசர்களுக்கும் ரப்பர் ப்ளாண்டேஷன் சம்பந்தமாக ஏதாவது பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், அவர்களுக்குப் பயிற்சி கொடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அங்கு பணியாற்றுகின்ற மேலதிகாரி அதற்கென்றே படித்து வந்திருக்கிறார். அவர் கீழே வேலை செய்யக்கூடிய அதிகாரிகளுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, from the answer given by the Hon. Minister for Agriculture, I learn that there is a Training Centre for Forest Officers in Denkinikotta in the Hosur district. Will the Hon. Minister be pleased to state the number of officers trained in that Centre ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: அது பற்றிய முழு விவரம் இல்லை.

திரு. ந. தருமலிங்கம்: வேதாரண்யம், கோடிக்கரைகாடு பிரசித்தி பெற்ற காடுகள் ஆகும். இங்கு மான்கள், குதிரைகள், முரட்டுத்தனமான காளை மாடுகள் இடம் பெற்றுள்ளன. தொண்டியக் காடு, தில்லைவனம் போன்ற பகுதிகளில் காட்டு வளத் துறை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அது பற்றி யோசிக்கலாம்

திரு. கே. போஜன் : காட்டு வளத்துறை பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு எத்தனை மாணவர்கள் பயிற்சி பெற சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி ; ஆண்டு ஒன்றுக்கு .·.பாரஸ்டர் பயிற்சிக்கு 30 பேரும், பாரஸ்ட் காடுகள் பயிற்சிக்கு 120 பேரும் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : இந்தப் பயிற்சியில் சேர என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும்? எப்படிச் சேர வேண்டும் ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : பயிற்சி பெறக்கூடிய பாடங்கள் காடு வளர்ப்பு, வன விலங்குகள் பாதுகாப்பு, காடுகள் குறித்த சட்டம் போன்றவற்றிலே பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

திரு. டி. மார்டின் : அமைச்சர் அவர்கள் கூறிய பதிலிலிருந்து ஏற்கனவே அந்தப் பாடங்களைப் படித்துத் தெரிந்தவர்கள் அந்தப்பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா அல்லது அவர்கள் அங்கு சேர்ந்த பிறகு அந்தப் பாடங்கள் அவர்களுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சேர்ந்த பிறகுதான் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

ஹாஜி ம. மு. பீர் முகமது : நமது மாநிலத்தில் காட்டு வளத் துறை பயிற்சி நிலையம் புதிதாக ஆரம்பிப்பதானால் அடர்ந்த காடுகள் அடங்கிய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பொதிகை மலைச்சாரலிலே பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் குறிப்பிடுகிற பகுதி பற்றியும் யோசிக்கப்படும்.

விளம்பரத் துறை.

*147. வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல செய்தித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா.

சிக்கனத்தை உத்தேசித்து விளம்பர இலாகாவை (Publicity மூடிவிடுவது அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணி முத்து : இல்லை.